## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025—ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 21—ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகைத்திங்கள் 05—ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.50/2016 —ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண்.12/2025**

**01. சித்தாயி**
**02. பெருமாயி (இறந்தார்)**
**03. பெரியகவுண்டன் (இறந்தார்)**
**04. கோசலா** .. **மனுதாரர்கள்/வாதிகள்**
**05. PP1ஜெயா**
**06. PP2 யசோதா**
**07. PP3 சத்யா**
**08. PP4 கணபதி** .. **மனுதாரர்கள்/01 முதல் 04 உத்தேச தரப்பினர்கள்/03—ஆம் வாதியின் சட்டமுறை சார்பாற்றுனர்கள்/ 05 முதல் 08 வாதிகள்**

**—எதிர்—**

**01. தங்கம்மாள்**
**02.சுப்ரமணி**
**03. வசந்தா (எ) மொட்டை (இறந்தார்)**
**04. பாக்கியம் (இறந்தார்)**
**05. லட்சுமி**
**06.சுந்தரம்**
**07. குப்புசாமி**
**08.ஆனந்தாயி**
**09. கோபால்**
**10. அம்மாசி**
**11. கந்தசாமி**
**12. ஜெகதிஷ்**
**13. ரவி**
**14. சங்கீதா**
**15. துரைசாமி**
**16. மாதவி**
**17. சங்கர்**
**18. சுரேஷ்**
**19. பரிபூரணம்**
**20. ராஜாத்தி**
**21. ஆராம்பாள்**
**22.துரை (ஏ)ஆறுமுகம்**
**23. சங்கீதா**
**24.லட்சுமி (இறந்தார்)**
**25. தேவி**

III rd ADJ Court, Salem

**26. சாந்தம்மாள்**
**27. சரோஜா**
**28. கவுண்டப்பன் (இறந்தார்)**
**29. மாணிக்கம் (இறந்தார்)**
**30.டெல்லி**
**31. சின்னதாயி**
**32. கோபால் (இறந்தார்)**
**33.இராஜேந்திரன்**
**34.செல்லம்மாள்**
**35. சித்ரா**
**36. சுப்ரமணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம் மனு 21.11.2025-ஆம் நாள் இறுதி விசாரணைக்கு வந்தபோது 01முதல் 04வரையிலான மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.S. சம்பத்** அவர்களும் 05முதல் 08வரையிலான மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு K.M.ஜெயபால்** அவர்களும் 11, 12, 01,02, 05, 06, 15 முதல் 18 , 22, 23, 27, 30, 32, 33, 35-ஆம் எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும் 03, 04, 24,28, 29, 32 எதிர்மனுதாரர்கள் இறந்தவிட்ட நிலை-யிலும் 07முதல் 10வரையிலான எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திருM.சண்முகசுந்தரம்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்து -வந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

இறந்துபோன03-ஆம் வாதியின் முதல்வகுப்பு வாரிசுகளை 05 முதல் 08 வரையிலான மனுதாரர்கள்/வாதிகளாக முதலேற்பு வழக்கில் சேர்க்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு சட்டத்தின் 01-ஆம்

IIIrd ADJ Court, Salem.

வகுமுறையின் 10(2)-ஆம் விதியின்கீழ் 05முதல் 08வரையிலான மனுதாரர்களால் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

**01.** இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துபோன 03-ஆம் வாதியின் முதல்வகுப்பு வாரிசுகள் 05முதல் 08வரையிலான மனுதாரர்கள் ஆவர். 01முதல் 04வரையிலான வாதிகள் பாகப்பிரிவினைக்காகவும் இதர நிவாரணங்களுக்காகவும் முதலேற்பு வழக்கை 01முதல் 36வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தொடுத்துள்ளனர். வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 03-ஆம் வாதி பெரியகவுண்டன் 15.01.2021-ஆம் தேதியன்று இறந்துவிட்டார். ஆகையால், இந்த வழக்கில் 05 முதல் 08 வரையிலான மனுதாரர்களை வாதிகளாக சேர்த்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

**02.** 07முதல் 10வரையிலான எதிர்மனுதாரர்கள் மட்டும் எதிருரை தாக்கல்செய்தனர். வழக்குரையில் 07-ஆம் பிரதிவாதியின் பெயர் குப்பன் என்று உள்ளது. இந்த மனுவில் குப்புசாமி என்று உள்ளது. 01-ஆம் எதிர்மனுதாரர் தங்கம்மாள் இறந்து 06 ஆண்டுகளும் 05-ஆம் எதிர்மனுதாரர் லட்சுமி இறந்து 02 ஆண்டுகளும் ஆகிறது. 10-ஆம் எதிர்மனுதாரர் அம்மாசி 11.04.2024-ஆம் தேதியன்று இறந்துவிட்டார். 03-ஆம் எதிர்மனுதாரர் வசந்தா இறந்து 02 ஆண்டுகளும் 31-ஆம் எதிர்மனுதாரர் சின்னத்தாயி இறந்து 06 மாதங்களும் 32-ஆம் எதிர்மனுதாரர் கோபால் இறந்து 03 ஆண்டுகளும் ஆகிறது. அவர்களின் சட்டமுறை சார்பாற்றுநர்களை



III rd ADJ Court, Salem

வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தரப்பினர்களின் பெயர் விவரங்கள் வழக்குரையிலும் மனுவிலும் வேறுபடுகின்றன.

**03.** 03-ஆம் வாதி பெரியகவுண்டன் 15.01.2021-ஆம் நாள் இறந்தார். உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் 22-ஆம் வகுமுறையின் 03-ஆம் விதியின்கீழ் இறந்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். 90 நாட்கள் முடிந்தபின் அடுத்த 60 நாட்களில் வழக்கு அற்றுபோய்விட்டது. இந்த மனு தாக்கல்செய்யப்பட்ட நாளில் 1721 நாட்கள் காலதாமதம் உள்ளது. காலவரம்பீட்டுச் சட்டத்தின் 05-ஆம் பிரிவு, உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 22-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதி, 22-ஆம் வகுமுறையின் 03-ஆம் விதியின்கீழ் மனுக்களை தாக்கல்செய்யாமல் உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு சட்டத்தின் 01 ஆம் வகுமுறையின் 10(2)-ஆம் விதியின்கீழ் தாக்கல்செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

### தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

04. **இம்மனு அனுமதிக்கத்தக்கதா?**

### தீர்முடிவு

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குரையில் கண்டுள்ள சாட்டுரைகளின்படி இறந்துபோன ரங்கசாமி என்பவருக்கு வழக்குச் சொத்தில் ¼ பாகத்திற்கு உரிமை இருந்ததாகவும் அவரது ¼ பாகத்தைப் பொறுத்து அவரது



IIIrd ADJ Court, Salem

வாரிசுகளான வாதிகள் பாகப்பிரிவினை கோருவதாகவும் சொல்லப்-பட்டுள்ளது.

06. ரங்கசாமியின் ¼ பாகத்தைப் பொறுத்து வழக்கிடுவதற்கான உரிமை வாதிகள் நால்வரில் ஒருவர் இறந்தாலும் மற்றொருவரிடம் சேர்ந்து அடைந்து இருக்கும்.அந்த வகையில் 02-ஆம் வாதி பெருமாயியும் 03-ஆம் வாதி பெரியகவுண்டனும் இறந்துவிட்டாலும் இவ்வழக்கு அற்றுப்போகாது. வழக்கிடுவதற்கான உரிமை எஞ்சிய 01-ஆம் வாதி சின்னத்தாயி, 04-ஆம் வாதி கோசலா ஆகியோரிடமும் சேர்ந்து அடைந்து இருக்கும். ஆகையால், இந் நீதிமன்றம் 02-ஆம், 03-ஆம் வாதிகள் இறந்துவிட்டதால் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 22-ஆம் வகுமுறையின்கீழ் நடவடிக்கை எடுக்கத் தேவை இல்லை என்று 08.09.2025-ஆம் தேதியன்று ஆணையிட்டு இருந்தது.

**07.** இவ்வாறான நிலையில் 03-ஆம் வாதி பெரியகவுண்டனின் முதல் வகுப்பு வாரிசுகளான 05முதல் 08வரையிலான மனுதாரர்கள் தங்களையும் முதலேற்பு வழக்கில் 05முதல் 08வரையிலான வாதிகளாக சேர்க்க ஆணை யிடக் கோரி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்கள். அவ்வாறு தாக்கல் செய்வதற்கு 05முதல் 08வரையிலான மனுதாரர்களுக்கு உரிய உரிமையை மறுக்க முடியாது.

**08.** எதிர்மனுதாரர்கள் எதிருரையில் சுட்டிக் காட்டியுள்ள மற்ற குறைபாடுகள் இந்த மனுவை தள்ளுபடிச் செய்வதற்கான அடிப்படையான காரணங்களாக அமையவில்லை. அவை யாவும் முதலேற்பு வழக்கு

IIIrd ADJ Court, Salem

நடவடிக்கையில் கவனத்தில் கொள்ளப்படும். ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம்முடிவுசெய்கிறது.

09. இருப்பினும் ஒட்டுமொத்த சங்கதியையும் கவனத்தில் வைத்து செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து இம் மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

10. இறுதியாக, 05முதல் 08வரையிலான மனுதாரர்கள் இந்த மனு மீதான நடவடிக்கையில் எதிருரை தாக்கல்செய்த 07முதல் 10வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு 2,000/- **(இரண்டாயிரம் மட்டும்)** உரூபாயை செலவுத் தொகையாக 28.11.2025-ஆம் தேதியன்றுக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம் மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இம் மனு தள்ளுபடிச் செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 21–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே. புகழேந்தி**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem